# P.L.RAJ IAS & IPS ACADEMY

**Building Bureaucrats Since 2006**

## May 29, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மத்திய ஆசியாவின் மிகப்பெரிய நாடான கஜகஸ்தானில் முதல் அணுமின் நிலையத்தை அமைப்பதற்காக 1,650 கோடி டாலர் மதிப்பிலான ஒப்பந்தத்தில் ரஷியா கையொப்பமிட்டது.

(i) இருதரப்புப் பேச்சுவார்த்தைக்காக கஜகஸ்தான் வந்துள்ள ரஷிய அதிபர் விளாதிமீர் புதின் மற்றும் கஜகஸ்தான் அதிபர் காசிம் ஜோமார்ட் டோகாயெவ் கையொப்பமிட்ட ஒப்பந்தங்களைப் பரிமாறிக் கொண்டனர்.

(ii) சீனா, பிரான்ஸ், தென் கொரிய நிறுவனங்களைப் பின்னுக்குத் தள்ளி, ரஷியாவின் அரசு அணுசக்தி நிறுவனமான 'ரொஸாடம்' இந்த ஒப்பந்தத்தைப் பெற்றுள்ளது. பாதுகாப்பு, உள்கட்டமைப்புக்கான 200 கோடி டாலர் உள்பட இதன் மொத்த திட்டச் செலவு சுமார் 1,650 கோடி டாலராகும். இதில் கணிசமான தொகையை ரஷியா கடனாக வழங்கவுள்ளது.

(iii) இரு உலைகள் கொண்ட இந்த அணு மின் நிலையத்தின் கட்டுமானப் பணிகள் 2027-இல் தொடங்கி, 2034-இன் தொடக்கத்தில் முதல் உலை பயன் பாட்டுக்கு வரவுள்ளது.

(iv) உலகின் மிகப்பெரிய யுரேனியம் உற்பத்தியாளராக கஜகஸ்தான் திகழ்கிறது. சோவியத் காலகட்டத்தில் அணு ஆயுத சோதனைகளால் மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட இந்நாடு, கடந்த 20 ஆண்டுகளாக அணுமின் நிலையத்தை அமைப்பது குறித்து தீவிரமாகப் பரிசீலித்து வந்தது.

(v) பின்னர், 2024-இல் நடத்தப்பட்ட பொது வாக்கெடுப்பில் அணுமின் நிலையம் அமைக்க பெருவாரியான மக்கள் ஆதரவளித்தனர். இதையடுத்து, நாட்டின் தென்கிழக்கு பகுதியில் பால்காஷ் ஏரிக்கரையில் அமைந்த உல்கென் கிராமம் இந்த பிரம்மாண்ட திட்டத்துக்காகத் தேர்வு செய்யப்பட்டது.

(vi) பழைய மின் உற்பத்தி நிலையங்களால் உள் நாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாததால் ரஷியாவிடமிருந்து மின்சாரத்தை இறக்குமதி செய்து வரும்நிலையில், சீனா உதவியுடன் 2-ஆவது அணுமின் நிலையத்தை அமைப்பதற்கும் கஜகஸ்தான் அரசு தற்போது ஒப்புதல் அளித்துள்ளது.

2. மாநில அரசியல் கட்சிகளின் வருவாய் முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடும்போது 2024-25-ஆம் ஆண்டில் 52 சதவீதம் அளவுக்கு சரிந்திருப்பது ஜனநாயக சீர்திருத்தத்துக்கான சங்கத்தின் (ஏடிஆர்) அறிக்கை மூலம் தெரிய வந்துள்ளது.

(i) தேர்தல் ஆணைய வலைதளத்தில் வெளியிடப்பட்டுள்ள 2024-25- ஆம் நிதியாண்டுக்கான அரசியல் கட்சிகளின் வருடாந்திர தணிக்கை அறிக்கை தரவுகளின் அடிப்படையில் ஏடிஆர் இந்த அறிக்கையை தயார் செய்து வெளியிட்டுள்ளது. அதில் கூறியிருப்பதாவது:

- மொத்தமுள்ள 67 அங்கீகரிக்கப்பட்ட மாநிலக் கட்சிகளில் 36 அரசியல் கட்சிகள் வருடாந்திர தணிக்கை அறிக்கையை சமர்ப்பித்துள்ளன. ஆனால், திமுக, சிவசேனை, சிவ சேனை (தாக்கரே), தேசியவாத காங்கிரஸ், ஜம்மு-காஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சி உள்பட 31 அரசியல் கட்சிகள் கடந்த ஆண்டு அக்டோபர் 31-ஆம் தேதியுடன் காலக் கெடு முடிவடைந்த பிறகும் இந்த அறிக்கையை சமர்ப்பிக்கவில்லை.
- அதன்படி, 2024-25 நிதியாண்டில் 36 மாநில அரசியல் கட்சிகளின் வருவாய் ரூ.1,192.94 கோடியாக உள்ளது. முந்தைய 2023-24 நிதியாண்டில் இக்கட்சிகளின் வருவாய் ரூ. 2,463.17 கோடியாக இருந்தது. அதன்படி, வருவாய் 51.57 சதவீதமாக (ரூ.1,270.23 கோடி) சரிந்துள்ளது.
- அதே நேரம், இந்தக் கட்சிகளின் செலவினம் ரூ.1,433.07 கோடியாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இது, கட்சிகளின் வருவாயைக் காட்டிலும் 20 சதவீதம் (ரூ.240.12 கோடி) கூடுதலாகும்.
- இந்த மொத்த வருவாயில் 5 பெரிய கட்சிகள் மட்டும் 69 சதவீத வருவாயையும், 77 சதவீதம் அளவுக்கு செலவீனத்தையும் செய்துள்ளன. குறிப்பாக, ஆந்திரத்தில் ஆளும் தெலுங்கு தேசம் கட்சி ரூ.228.31 கோடி வருவாய் ஈட்டியதாக அறிவித்துள்ளது.
- இது கட்சிகளின் மொத்த வருவாயில் 19.14 சதவீதமாகும். இதற்கு அடுத்தபடியாக திரிணமூல் காங்கிரஸ் ரூ.219.35 கோடி ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் ரூ.140.39 கோடி வருவாயை ஈட்டியதாக அறிவித்துள்ளன.
- இதில், ஒய்எஸ்ஆர் காங்கிரஸ் கட்சி வருவாய்க்கு மேல் கூடுதலாக ரூ.340.20 கோடி செலவு செய்துள்ளது. திரிணமூல் காங்கிரஸ் ரூ.227.59 கோடி செலவு செய்ததாக அறிவித்துள்ளது. இதுபோல, 36 கட்சிகளில் 21 கட்சிகள் தங்களின் வருவாயை விட கூடுதலாக செலவு செய்ததாக அறிவித்துள்ளன. 15 மாநிலக் கட்சிகள் வருவாயில் 55 சதவீதம் அளவுக்கும், அதற்கும் குறைவாகவும் செலவு செய்துள்ளதாக அறிவித்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. மாநிலங்களுக்கு இடையேயான தண்ணீர் பிரச்னைக்கு கூட்டுறவு மூலம் தீர்வு காண வேண்டும்' என்று பிரதமர் நரேந்திர மோடி வலியுறுத்தினார். தில்லியில் நடைபெற்ற 'பிரகதி' திட்ட ஆய்வுக் கூட்டத்தின்போது இந்த வலியுறுத்தலை பிரதமர் முன் வைத்தார். இது குறித்து மத்திய அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

- மத்திய, மாநில அரசுகளின் முயற்சிகளை தடையின்றி ஒருங்கிணைப்பதன் மூலம் திட்டங்களை உரிய நேரத்தில் செயல் படுத்துவதை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்ட தகவல் தொழில்நுட்பம் சார்ந்த பல்முனைத் தளமான 'பிரகதி' திட்டத்தின் 51-ஆவது கூட்டம் பிரதமர் மோடி தலைமையில் தில்லியில் நடைபெற்றது.
- இதில், 9 மாநிலங்களில் சுமார் ரூ.30,000 கோடி மதிப்பில் 7 முக்கிய உள்கட்டமைப்புத் திட்டங்கள், பொது வளர்ச்சிப் பணிகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.
- மத்திய பிரதேசத்தில் உள்ள கென் நதியிலிருந்து கிடைக்கும் உபரி நீரை, உத்தர பிரதேசத்தில் நீர்ப் பற்றாக்குறை நிலவும் பெத்வா நதிக்குக் கொண்டு சேர்ப்பதை நோக்கமாகக் கொண்டு செயல்படுத்தப்படும் 'கென்-பெத்வா' இணைப்புத் திட்டம் குறித்தும் பிரதமர் இந்தக் கூட்டத்தில் ஆய்வுசெய்தார்.
- மேலும், நகர்ப்புறங்களுக்கான இரண்டாம் கட்ட தூய்மை பாரத (ஸ்வச் பாரத் இயக்கம் – நகர்ப்புறம் 2.0) திட்டம் குறித்தும் பிரதமர் ஆய்வு மேற்கொண்டார்.

- அப்போது, 'கென்-பெத்வா திட்டத்தை முன்மாதிரியாகக் கொண்டு, பிற மாநிலங்களும் தங்களுக்கு இடையேயான நதி நீர் பிரச்னைக்கு கூட்டுறவு, உரிய நேரத்தில் ஒப்புதல் அளிப்பது, தொழில்நுட்ப ரீதியிலான கண்காணிப்பு போன்றவற்றின் மூலம் தீர்வு காண வேண்டும்.
- நீண்டகால தண்ணீர்ப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், இதுபோன்ற நடைமுறைகள் மூலம் ஆறுகளை ஒன்றிணைத்தல் நீர்ப் பாதுகாப்பு, நிலத்தடி நீர் மறு சுழற்சி, திறமிக்க நீர்ப்பாசனம் உள்ளிட்டவற்றை மாநிலங்கள் சாத்தியப்படுத்த வேண்டும் என்று பிரதமர் கேட்டுக்கொண்டார்.
- மின் திட்டங்கள் குறித்து ஆய்வு செய்த பிரதமர், மின்சார செலவைக் குறைத்து, எரிசக்தி பாதுகாப்பு மற்றும் தூய்மை எரிசக்தி பயன்பாட்டை ஊக்குவிக்கும் நோக்கில் வீட்டின் கூரைகள் மற்றும் மேல்மாடி சூரியசக்தி மின் திட்டத்தை ஓர் இயக்கமாக மாநிலங்கள் செயல்படுத்த வேண்டும். நகரங்கள், குடியிருப்புப் பகுதிகள், அரசு நிறுவனங்கள் மேல்தளங்கள் என நகர்ப்புற பகுதிகள் முழுவதும் சூரியசக்தி எரிசக்தி உற்பத்தி திட்டத்தை ஊக்குவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.
- சாலை மற்றும் துறைமுகங்கள் இணைப்புத் திட்டம், தூய்மை பாரத இயக்கம் 2.0 திட்டத்தை திறம்பட நடைமுறைப்படுத்துவது குறித்தும் பிரதமர் இக் கூட்டத்தில் ஆய்வு மேற்கொண்டார். அப்போது, கழிவு மறுசுழற்சி நிலையங்கள் உள்பட திடக்கழிவு மேலாண்மை தொடர்பான உள்கட்டமைப்புகள் உருவாக்குவதை விரைவுபடுத்துமாறு மாநிலங்களை பிரதமர் கேட்டுக்கொண்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

4. பொதுத் துறை தொலைத்தொடர்பு நிறுவனமான பிஎஸ்என்எல்-இன் வருவாய், உள்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டதன் காரணமாக கடந்த 2 நிதியாண்டுகளில் சுமார் 19 சதவீதம் அதிகரித்து, ரூ.25,000 கோடியை எட்டியுள்ளது.

5. பிரபல இந்திய மல்யுத்த வீராங்கனை வினேஷ் போகத்தை ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கான தகுதித் தேர்வு போட்டிகளில் பங்கேற்க அனுமதித்து தில்லி உயர்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவை எதிர்த்து இந்திய மல்யுத்த சம்மேளனம் (டபிள்யு எஃப்ஐ) உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளது.

6. அமைதிப் பேச்சுவார்த்தை உள்பட போர் நிறுத்த முன்னெடுப்புகள் குறித்து உக்ரைன் வெளியுறவு அமைச்சர் ஆண்ட்ரி சிபிஹாவுடன் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் ஆலோசனை நடத்தினார்.

(i) உக்ரைன்-ரஷியா போர் 4 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில், அங்கு நீடித்த அமைதியை நிலைநிறுத்துவது உள்பட பல்வேறு விவகாரங்கள் குறித்து ஆண்ட்ரி சிபிஹாவுடன் அவர் விவாதித்தார்.

(ii) ஐரோப்பிய வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்கும் ஜிம்னிச் ஆலோசனைக் கூட்டம் சைப்ரஸ் நாட்டில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில் சர்வதேச புவி அரசியல், பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் விவாதிக்கப்படவுள்ளன. இதில் பங்கேற்பதற்காக ஜெய்சங்கர் புதன்கிழமை சைப்ரஸ் வந்தடைந்தார்.

(iii) அங்கு சவூதி வெளியுறவு அமைச்சர் இளவரசர் ஃபைசல் பின் ஃபர்ஹான் அல் சௌத், ஐரோப்பிய வெளியுறவு விவகாரங்களுக்கான உயர் பிரதிநிதி காஜா கல்லாஸ் மற்றும் சைப்ரஸ் வெளியுறவு அமைச்சர் கான்ஸ் டன்டினோஸ் கொம்போஸ் ஆகியோரை அவர் சந்தித்தார். அவர்களுடன் மேற்காசிய விவகாரம்,

இந்தியா-ஐரோப்பிய ஒத்துழைப்பு குறித்து ஜெய்சங்கர் ஆலோசனை நடத்தினார்.

7. சுரங்கத் தொழிலில் நிலவும் தொடர்ச்சியான அபாயங்கள், சமீபத்திய துயரம் மற்றும் வரலாற்றுப் பேரழிவுகள் மீது கவனம் செலுத்துதல்.

(i) சீனாவில் சமீபத்திய துயரம்

- மே 22 அன்று, வட சீனாவின் ஷான்சி மாகாணத்தில் உள்ள கின்யுவான் மாவட்டத்தில் உள்ள ஜிக்சியாங் நிலக்கரிச் சுரங்கத்தில் ஒரு கடுமையான வாயு வெடிப்பு ஏற்பட்டது.
- இந்த விபத்தில் 90 சுரங்கத் தொழிலாளர்கள் உயிரிழந்தனர்.
- அதிபர் ஷி ஜின்பிங், விரிவான மீட்புப் பணிகள் மற்றும் காயமடைந்தவர்களுக்கு சிறப்பு மருத்துவ சிகிச்சை அளிக்க உடனடியாக உத்தரவிட்டார்.

(ii) வரலாற்று ரீதியான முக்கிய உலகளாவிய பேரழிவுகள்

- சீனா: 1942-ல் நச்சு வாயுவால் ஏற்பட்ட பென்சிஹு நிலக்கரிச் சுரங்கப் பேரழிவு, 1,549 உயிரிழப்புகளுடன் உலகின் மிக மோசமான சுரங்க விபத்தாகக் கருதப்படுகிறது. மற்ற முக்கிய சீனப் பேரழிவுகளில் 1960-ல் 684, 2005-ல் 214, மற்றும் 2009-ல் 108 இறப்புகள் அடங்கும்.
- பிரான்ஸ்: 1906-ல், கூரியர்ஸ் சுரங்கத்தில் ஏற்பட்ட நிலக்கரித் தூள் வெடிப்பில் 1,099 பேர் கொல்லப்பட்டனர்.
- ஜப்பான்: 1914-ல் (687 இறப்புகள்) மற்றும் 1963-ல் (கார்பன் மோனாக்சைடு நச்சுத்தன்மையால் 458 இறப்புகள்) குறிப்பிடத்தக்க விபத்துக்கள் நிகழ்ந்தன.
- இங்கிலாந்து மற்றும் தென்னாப்பிரிக்கா: 1913-ல் வேல்ஸில் ஏற்பட்ட மீத்தேன் வெடிப்பில் 439 பேர் கொல்லப்பட்டனர், அதே நேரத்தில் 1960-ல் தென்னாப்பிரிக்காவில் ஏற்பட்ட சுரங்க சரிவில் 435 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.

(iii) இந்தியாவில் நடந்த பெரும் விபத்துக்கள்

- 1965-ல், ஜார்கண்ட் மாநிலம் தன்பாத்தில் உள்ள தோரி நிலக்கரிச் சுரங்கத்தில் ஏற்பட்ட தீ மற்றும் நிலக்கரித் தூள் வெடிப்பில் 375 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.
- 1975-ல், தன்பாத்தில் உள்ள சாஸ்னாலா சுரங்கத்தில் ஏற்பட்ட பேரழிவில், நிலக்கரித் தூள் வெடிப்பினால் கூரை இடிந்து விழுந்து, நிலத்தடியில் பெரும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதால் 372 பேர் உயிரிழந்தனர்.

(iv) சுரங்க விபத்துகளுக்கான முதன்மைக் காரணங்கள்

- வாயுக்கசிவுகள்: இயற்கையான மீத்தேன் வாயுவின் தேக்கம் அல்லது கார்பன் மோனாக்சைடு, ஹைட்ரஜன் சல்பைடு போன்ற நிறமற்ற, மணமற்ற வாயுக்கள் வெளியேறுவது வெடிப்புகளுக்கோ அல்லது மூச்சுத்திணறலுக்கோ வழிவகுக்கிறது.
- சுற்றுச்சூழல் அபாயங்கள்: போதுமான காற்றோட்ட அமைப்புகள் இல்லாததும், எதிர்பாராத நிலத்தடி வெள்ளப்பெருக்கும் அடிக்கடி நிகழும் காரணிகளாகும்.
- மேலாண்மை மற்றும் மனிதப் பிழை: விபத்துக்குப் பிந்தைய ஆய்வுகள்,

பாதுகாப்பு நெறிமுறைகளைப் பின்பற்றத் தவறுதல் மற்றும் நிர்வாக அலட்சியம் ஆகியவற்றை மூலக் காரணங்களாக அடிக்கடி வெளிப்படுத்துகின்றன.

(v) சமூக-பொருளாதாரக் காரணிகள்

- வறுமையும் வாய்ப்பின்மையும்: மாற்று வேலைவாய்ப்புகள் இல்லாத காரணத்தினால், ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் சுரங்கங்கள் அல்லது பட்டாசுத் தொழிற்சாலைகளில் உயிருக்கே ஆபத்தான சூழல்களில் தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.
- தொழில்நுட்ப வரம்புகள்: அமெரிக்கா மற்றும் சீனா போன்ற தொழில்நுட்பத்தில் மேம்பட்ட நாடுகளாலேயே இத்தகைய விபத்துகளைத் தவிர்க்க இயலவில்லை என்றால், இந்தியா போன்ற வளரும் நாடுகளுக்கு ஏற்படும் ஆபத்து மிக அதிகமாகவே இருக்கும்.

(vi) முடிவுரையும் விழிப்புணர்வின் அவசியமும்

- அனைத்து நாடுகளும் சீனாவில் நிகழ்ந்த விபத்திலிருந்து பாடம் கற்றுக்கொண்டு, பணியிடப் பாதுகாப்பு குறித்துத் தொடர் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும்.
- பேரழிவு ஏற்படுத்தக்கூடிய விபத்துகளைத் தடுத்திடவும் கட்டுப்படுத்திடவும், முன்கூட்டியே செயல்படும் வகையிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அரசுத் துறைகளுக்கு அதிபர் ஷி ஜின்பிங் குறிப்பாக அறிவுறுத்தியுள்ளார்.